**அக்டோபர் – 03**

# TNPSC துளிகள்

- இந்தியாவின் முதல் இரட்டை எரிபொருள் திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு (LNG) ரயில் குஜராத்தின் அகமதாபாத்தில் உள்ள சபர்மதி ரயில் நிலையத்திலிருந்து கொடியசைத்து தொடங்கி வைக்கப்பட்டது.
- சாபஹார் துறைமுகத்தை ஈரானின் தேசிய ரயில் கட்டமைப்புடன் இணைக்கும் வகையில் 2026 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் சாபஹார்-சாஹேடன் ரயில் பாதையில் ஈரான் தடம் பதிக்கும் பணியை நிறைவு செய்தது.
    - இந்த வழித்தடமானது பாகிஸ்தானைத் தவிர்த்து, ஓமன் வளைகுடாவை ஆப்கானிஸ்தான், மத்திய ஆசியா மற்றும் கிழக்கு ரஷ்யாவுடன் இணைக்கிறது; சாபஹார் ஈரானின் ஒரே பெருங்கடல் துறைமுகமாகும், மேலும் சாஹேடன் என்பது சிஸ்டான் மற்றும் பலுசிஸ்தான் மாகாணத்தின் தலைநகரமாகும்.
- கஜகஸ்தானின் ஆஸ்கெமனில் KAZIND-2026 என்ற கூட்டு ராணுவப் பயிற்சியின் 9வது பதிப்பை இந்தியாவும் கஜகஸ்தானும் நடத்துகின்றன.
- உஸ்பெகிஸ்தானின் சமர்கண்டில் நடைபெற்ற 46வது செஸ் ஒலிம்பியாட் போட்டியில் ஒட்டு மொத்தமாக சிறந்த நாடாகத் திகழ்ந்து நோனா கப்ரிண்டாஷ்விலி கோப்பையை இந்தியா தக்க வைத்துக் கொண்டது.
- மத்தியப் பிரதேச மாநிலம் ஜபல்பூரில் உள்ள பேடாகாட்-லம்ஹேடாகாட்டில் இந்தியாவின் முதல் உலகத்தரம் வாய்ந்த புவியியல் அருங்காட்சியகத்தை உருவாக்க ₹87 கோடி மதிப்பிலான திட்டத்திற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்தியாவின் ஒருங்கிணைந்த கட்டண இடைமுகத்தை (UPI) ஏற்றுக்கொள்ளும் முதல் கரீபிய நாடாக டிரினிடாட் மற்றும் டொபாகோ மாறவுள்ளது.
    - பூட்டான், நேபாளம், சிங்கப்பூர், ஐக்கிய அரபு அமீரகம், பிரான்ஸ், இலங்கை, மொரிஷியஸ், கத்தார், கம்போடியா, கிரீஸ் மற்றும் மாலத்தீவு உள்ளிட்ட 11 வெளிநாடுகளில் தற்போது UPI செயல்பட்டு வருகிறது.
- மும்பை-அகமதாபாத் புல்லட் ரயில் திட்டத்திற்கான இந்தியாவின் முதல் இரும்புப் பாலம் மகாராஷ்டிராவின் தானே மாவட்டத்தில் உள்ள பிவாண்டியில் உள்ள திவே-அஞ்சூர் கிராமத்தில் தொடங்கப்பட்டது.
- உஸ்பெகிஸ்தானின் சமர்கண்டில் நடைபெற்ற 2026 ஆம் ஆண்டு மகளிர் சதுரங்க ஒலிம்பியாட் போட்டியில் தனது மூன்றாவது WGM தகுதியைப் பெற்றதன் மூலம் 11 வயதான போதனா சிவானந்தன் மிகக் குறைந்த வயதில் பெண் கிராண்ட்மாஸ்டர் (WGM) ஆனார்.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## தரங்கம்பாடி கடல்சார் பாரம்பரியம்

- 1620 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள தரங்கம்பாடியில் தரையிறங்கிய டேனிஷ் கடற்படை கப்பலான 'எலிஃபண்ட்' (Elephant) கப்பலின் மாதிரி தரங்கம்பாடி கடல்சார் அருங்காட்சியகத்திற்கு நன்கொடையாக வழங்கப் பட்டது.
- தெற்காசியாவுடன் வர்த்தகத் தொடர்புகளை ஏற்படுத்த அனுப்பப்பட்ட 2 போர்க் கப்பல்கள் மற்றும் 3 வணிகக் கப்பல்கள் அடங்கிய கடற்படையின் ஒரு பகுதியாக

எலிஃபண்ட் கப்பல் இருந்தது.

- இந்தக் கடற்பயணமானது அட்மிரல் ஓவ் கெட்டே தலைமையில் மேற்கொள்ளப்பட்டு, 1620 ஆம் ஆண்டு செப்டம்பர் 13 அன்று தரங்கம்பாடியை வந்தடைந்தது.
- பின்னர் தஞ்சாவூர் நாயக்கருடன் ஒப்பந்தம் செய்து கொண்ட கெட்டே, தரங்கம்பாடியில் டான்ஸ்போர்க் கோட்டையை கட்டத் தொடங்கினார்.
- இந்தக் கப்பல் மாதிரியானது டென்மார்க்கில் உள்ள கோகே கடல்சார் மாதிரி உருவாக்குநர்கள் சங்கத்தால் கட்டப்பட்டது.
- இந்த மாதிரியானது டேனிஷ் தரங்கம்பாடி சங்கத்தால் தரங்கம்பாடி கடல்சார் அருங்காட்சியகத்திற்கு நன்கொடையாக வழங்கப்பட்டது.




# தேசியச் செய்திகள்

## நீர்வாழ் உயிரி வளர்ப்பு காப்பீட்டு முன்னெடுப்பு

- பிரதம மந்திரி மத்ஸ்ய கிசான் சம்ரிதி சாஹ்-யோஜனா (PM-MKSSY) திட்டத்தின் கீழ் 40% பிரீமியம் ஊக்கத்தொகையுடன் நீர்வாழ் உயிரி வளர்ப்பு காப்பீட்டை அரசு ஊக்குவித்து வருகிறது.
- 2024-25 ஆம் ஆண்டில் இந்தியா 19.8 மில்லியன் டன் என்ற இதுவரை இல்லாத அளவிலான மீன் உற்பத்தியைப் பதிவு செய்துள்ளது. இது உலகளாவிய உற்பத்தியில் சுமார் 8% ஆகும், இதன் மூலம் உலகின் இரண்டாவது பெரிய மீன் உற்பத்தி நாடாக இந்தியா உருவெடுத்துள்ளது.
- இந்தியாவின் மொத்த மீன் உற்பத்தியில் 74% க்கும் அதிகமான பங்கை நீர்வாழ் உயிரி வளர்ப்பு அளிக்கிறது என்ற நிலையில் இதில் கெண்டை மீன், இறால், கூண்டு மற்றும் கடல்சார் பண்ணை வளர்ப்பு ஆகியவை அடங்கும்.
- இந்தியாவில் சுமார் 14.1 லட்சம் ஹெக்டேர் உவர் நீர் பரப்பளவு உள்ளது, ஆனால் அதில் சுமார் 17% மட்டுமே நீர்வாழ் உயிரி வளர்ப்பிற்காக மேம்படுத்தப்பட்டுள்ளது.
- இந்தியாவில் சுமார் 1.95 லட்சம் கிலோமீட்டர் ஆறுகள் மற்றும் கால்வாய்களும், 31.5

லட்சம் ஹெக்டேர் நீர்த்தேக்கங்களும், 22.1 லட்சம் ஹெக்டேர் குளங்கள் மற்றும் தொட்டிகளும் உள்ளன.




## இந்தியாவில் நீர் சேமிப்பு நெருக்கடி




- மத்திய நீர் ஆணையத்தின் (CWC) அறிக்கையின்படி, 178 முக்கிய நீர்த்தேக்கங்களில் நீர் சேமிப்பு 2026 ஆம் ஆண்டு செப்டம்பர் 24 நிலவரப்படி அதன் மொத்தக் கொள்ளளவில் 70% ஆக குறைந்துள்ளது.
- இந்த நீர் இருப்பு அளவானது 10 ஆண்டு சராசரியான 76.62% மற்றும் 2025 ஆம் ஆண்டின் அளவான 79% ஐ விடக் குறைவாகும்.
- தென்னிந்தியாவில் (ஆந்திரப் பிரதேசம், தெலுங்கானா, கர்நாடகா, கேரளா மற்றும் தமிழ்நாடு) கடந்த ஆண்டு இதே காலக் கட்டத்தில் 87.25% ஆக இருந்த நீர் இருப்பு, தற்போது 50% மட்டுமே உள்ளது.

- இந்திய வானிலை ஆய்வு மையத்தின் (IMD) தரவுகளின்படி, செப்டம்பர் 28 நிலவரப்படி தென்னிந்தியா இயல்பை விட 23% குறைவான மழையைப் பெற்றுள்ளது.
- தெற்கு, கிழக்கு மற்றும் வடக்குப் பகுதிகளில் உள்ள 92 நீர்த்தேக்கங்களை உள்ளடக்கிய மத்திய நீர் ஆணையத்தின் அறிக்கையானது, மகாராஷ்டிரா மற்றும் கர்நாடகாவில் வறட்சி அறிவிக்கப்பட்ட சமயத்தில் வெளியாகியுள்ளது.

## OECDன் இந்தியாவின் வளர்ச்சி கணிப்பு

- பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டுக்கான அமைப்பு (OECD), 2026 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் மதிப்பிடப்பட்ட 6.3% லிருந்து 2026-27 ஆம் ஆண்டிற்கான இந்தியாவின் வளர்ச்சி கணிப்பை 7.1% ஆக உயர்த்தியுள்ளது.
- வலுவான உள்நாட்டு தேவை மற்றும் அரசாங்கக் கொள்கைகள் மேற்கு ஆசிய நெருக்கடியின் தாக்கத்தை இந்தியா தாங்கிக் கொள்ள உதவியதாக OECD தெரிவித்து உள்ளது.
- 2026-27 ஆம் ஆண்டில் 7.1% ஆக இருக்கும் இந்தியாவின் வளர்ச்சி, 2027-28 ஆம் ஆண்டில் 6.5% ஆகக் குறையும் என அது எதிர்பார்க்கிறது.
- S&P குளோபல் தனது 2026-27 ஆம் ஆண்டிற்கான கணிப்பை 7% ஆக உயர்த்தியுள்ளது, அதே சமயம் ஃபிட்ச் ரேட்டிங்ஸ் 6.9% ஆகவும், மூடிஸ் ரேட்டிங்ஸ் 7% ஆகவும் உயர்த்தி உள்ளன.
- வாங்கும் திறன் குறைவதால் 2026-27 ஆம் ஆண்டின் இரண்டாம் பாதியில் வளர்ச்சி குறையும் என்றும், அதனைத் தொடர்ந்து 2027 ஆம் ஆண்டில் படிப்படியாக மீட்சி அடையும் என்றும் OECD எதிர்பார்க்கிறது.

The Organisation for Economic Co-operation and Development (OECD) has raised India's GDP growth projection for current fiscal by 80 basis points to 7.1% citing resilient domestic demand and government policies that cushioned households and firms from the impact of higher energy prices. In June, it had projected the Indian economy to grow at 6.3% in 2026-27.

## பாராகுவாட் டைகுளோரைடுக்கு தடை

- மத்திய அரசு, வேளாண்மை மற்றும் உழவர் நல அமைச்சகத்தின் மூலம் மிகவும் நச்சுத் தன்மை வாய்ந்த மற்றும் தேர்ந்தெடுக்கப்படாத களைக்கொல்லியான பாராகுவாட் டைகுளோரைடை அதிகாரப்பூர்வமாக தடை செய்துள்ளது.
- பாராகுவாட் என்பது விரைவாகச் செயல்படும் மற்றும் பரவலாகப் பயன்படுத்தப்படும் ஒரு களைக்கொல்லியாகும், இது களைக் கட்டுப்பாடு மற்றும் பயிர்களை உலர வைப்பதற்குப் பயன்படுத்தப்படுகிறது.
- இது உட்கொள்ளப்படும்போது அதிக நச்சுத்தன்மை வாய்ந்தது, மேலும் கடுமையான

நுரையீரல் மற்றும் சிறுநீரக பாதிப்பை ஏற்படுத்தும், குறிப்பாக நுரையீரல் ஃபைப்ரோஸிஸ் போன்ற பாதிப்புகளை ஏற்படுத்தும்.

- மனித சுகாதாரம், கால்நடைகள் மற்றும் சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் அபாயங்கள் குறித்த நிபுணர்களின் ஆய்வின் அடிப்படையில் இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது.
- இந்தியாவில் பூச்சிக்கொல்லிகளின் இறக்குமதி, உற்பத்தி, விற்பனை, போக்குவரத்து, விநியோகம் மற்றும் பயன்பாடு ஆகியவற்றை 1968 ஆம் ஆண்டு பூச்சிக்கொல்லிகள் சட்டம் ஒழுங்குபடுத்துகிறது.




## சுற்றுச்சூழல் செய்திகள்

### FAO வனவியல் குழு




- இத்தாலியின் ரோமில் நடைபெற்ற COFO 28 கூட்டத்தில், நிலையான வன மேலாண்மை மற்றும் சுற்றுச்சூழல் மறுசீரமைப்பு ஆகியவற்றில் தனது சாதனைகளை இந்தியா

எடுத்துரைத்தது.

- வனவியல் குழு (COFO) என்பது உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் (FAO) கீழ் உள்ள வனவியல் தொடர்பான மிக உயர்ந்த உலகளாவிய அரசுகளுக்கிடையேயான சட்டப்பூர்வ அமைப்பாகும்.
- COFO அமைப்பானது 128 FAO உறுப்பினர்களைக் கொண்டுள்ளது; இது ரோமில் உள்ள FAO தலைமையகத்தில் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை கூடுகிறது.
- COFO 28 கூட்டத்தின் கருத்துரு Forests for food, resilience and prosperity என்பதாகும்.
- இந்தியாவின் காடு மற்றும் மரங்களின் பரப்பளவு 82.74 மில்லியன் ஹெக்டேரை எட்டியுள்ளது. இது அதன் நிலப்பரப்பில் 25.17% ஆகும்.
- FAO உலகளாவிய வன வள மதிப்பீடு (FRA) 2025-இன் படி, மொத்த வனப்பரப்பில் உலக அளவில் 9வது இடத்தையும், நிகர ஆண்டு வனப்பரப்பு அதிகரிப்பில் 3வது இடத்தையும் இந்தியா பெற்றுள்ளது.

## சர்வதேச திமிங்கல ஆணையக் கூட்டம் 2026




- ஆஸ்திரேலியாவின் ஹோபார்ட்டில் நடைபெற்ற சர்வதேச திமிங்கல ஆணையத்தின் 70வது கூட்டத்தில் (IWC-70), அறிவியல் அடிப்படையிலான செட்டேசியன் (கடல் பாலூட்டிகள்) பாதுகாப்பிற்கான தனது அர்ப்பணிப்பை இந்தியா மீண்டும் உறுதிப் படுத்தியது.
- சர்வதேச திமிங்கல ஆணையம் (IWC) 1946 ஆம் ஆண்டு டிசம்பர் 2 அன்று வாஷிங்டன், டி.சி.யில் கையெழுத்தான திமிங்கல வேட்டையை ஒழுங்குபடுத்துவதற்கான சர்வதேச மாநாட்டின் கீழ் நிறுவப்பட்டது.
- திமிங்கல வேட்டை மேலாண்மை மற்றும் திமிங்கலப் பாதுகாப்பிற்கான உலகளாவிய அமைப்பான IWC தற்போது 89 உறுப்பு நாடுகளைக் கொண்டுள்ளது.
- இந்தியா 1981 ஆம் ஆண்டு முதல் IWC அமைப்பில் உறுப்பினராக இருந்து வருகிறது, மேலும் அறிவியல் ஆராய்ச்சி, சர்வதேச ஒத்துழைப்பு மற்றும் நடைமுறைப் பாதுகாப்பு நடவடிக்கைகள் ஆகியவற்றை இது வலியுறுத்தியுள்ளது.
- இந்தியப் பெருங்கடல் பகுதியில் உள்ள கடல் பாலூட்டிகள் (திமிங்கில இனங்கள்) 1972 ஆம் ஆண்டு வனவிலங்கு (பாதுகாப்பு) சட்டத்தின் கீழ் மிக உயர்ந்த சட்டப் பாதுகாப்பைப் பெறுகின்றன; மேலும், இந்தியா டால்பின் திட்டம் மற்றும் கடல்சார் பாதுகாக்கப்பட்ட பகுதிகளைக் கொண்டுள்ளது.
- பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக அடையாளம் காணப்பட்ட 25 உயிரினங்களில்

அரபிக்கடல் ஹம்பேக் திமிங்கலத்திற்கு இந்தியா சிறப்புப் பாதுகாப்புக் கவனத்தை அளித்துள்ளது.

# முக்கிய தினங்கள்

## தேசிய தன்னார்வ இரத்த தான விழிப்புணர்வு தினம் 2026 - அக்டோபர் 01

- முறையான, தன்னார்வ மற்றும் ஊதியம் பெறாத இரத்த தானத்தை ஊக்குவிப்பதை இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தியாவில் இரத்த சேகரிப்பில் சுமார் 75% தன்னார்வ தானத்தின் மூலம் பெறப் படுகிறது.
- 2026 ஆம் ஆண்டு செப்டம்பர் 17 முதல் அக்டோபர் 2 ஆம் தேதி வரை நாடு தழுவிய மாபெரும் தன்னார்வ இரத்த தான முகாம் இளைஞர்களின் பங்கேற்பு மற்றும் பொது விழிப்புணர்வை மையமாகக் கொண்டு நடைபெறுகிறது.
- 2025 ஆம் ஆண்டில் இரத்த சேகரிப்பு செயல்பாட்டிற்காக மாநிலங்களில் ஹரியானா, உத்தரகாண்ட் மற்றும் பஞ்சாப் ஆகியவை முறையே முதல், இரண்டு மற்றும் மூன்றாம் இடங்களைப் பிடித்தன; வடகிழக்கு மாநிலங்களில் மிசோரம் மற்றும் சிக்கிம் முறையே முதல் இரண்டு இடங்களைப் பிடித்தன.
- ஒன்றியப் பிரதேசங்களில் சண்டிகர் மற்றும் டெல்லி முறையே முதல் இரண்டு இடங்களைப் பிடித்தன.
- 2026 ஆம் ஆண்டிற்கான கருத்துரு One Drop of Humanity. Give Blood. Save Lives என்பதாகும்.




## முதியோர்களுக்கான சர்வதேச விழிப்புணர்வு தினம் 2026 - அக்டோபர் 01

- முதியோர்களின் முதுமை தொடர்பான பிரச்சினைகள் மற்றும் அவர்களின் உரிமைகள் மற்றும் நல்வாழ்வை முன்னிலைப்படுத்துவதை இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஐக்கிய நாடுகள் பொதுச் சபை (UNGA) இந்த நாளை முதன்முதலில் 1990 ஆம் ஆண்டில் அனுசரித்தது.
- 60 வயது அல்லது அதற்கு மேற்பட்ட வயதினரின் எண்ணிக்கை 2025 ஆம் ஆண்டில் 1.22 பில்லியனை எட்டியுள்ளது, மேலும் இது 2050 ஆம் ஆண்டிற்குள் 2.1 பில்லியனை எட்டும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

- ❖ ஆரோக்கியமான முதுமையின் தசாப்தம் (2021–2030) முதியவர்கள், அவர்களது குடும்பங்கள் மற்றும் சமூகங்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ 2026 ஆம் ஆண்டிற்கான கருத்துரு The Age of Longevity: Rethinking Systems for Longer Lives என்பதாகும்.




## சர்வதேச காபி தினம் 2026 - அக்டோபர் 01




- ❖ சர்வதேச காபி அமைப்பின் (ICO) பிரசாரமான Coffee is Part of the Solution என்ற கருத்துருவுடன் இந்த நாள் அனுசரிக்கப்பட்டது.
- ❖ உலகம் முழுவதும் சுமார் 12.5 மில்லியன் விவசாயக் குடும்பங்களுக்கு காபி வருமானம் அளிக்கிறது என்று சர்வதேச காபி அமைப்பு (ICO) கூறுகிறது.
- ❖ இந்தியாவில் காபி முக்கியமாக கர்நாடகா, கேரளா மற்றும் தமிழ்நாட்டில் விளைவிக்கப் படுகிறது. மேலும் ஆந்திரப் பிரதேசம், ஒடிசா மற்றும் வடகிழக்கு மாநிலங்களிலும் இது பயிரிடப்படுகிறது.
- ❖ இந்தியா 2024-25 ஆம் ஆண்டில் 1,05,700 டன் அராபிகா மற்றும் 2,57,800 டன் ரோபஸ்டா உட்பட சாதனை அளவாக 3,63,500 மெட்ரிக் டன் காபியை உற்பத்தி செய்துள்ளது.
- ❖ 2024-25 ஆம் ஆண்டில் மறுஏற்றுமதி உட்பட 3,88,925 டன் காபியை 126 நாடுகளுக்கு

இந்தியா ஏற்றுமதி செய்துள்ளது.

- தனிநபர் காபி நுகர்வில் ஃபின்லாந்து ஆண்டுக்கு சுமார் 11.9 கிலோவுடன் மிக உயர்ந்த இடத்தைப் பிடித்துள்ளது, அதைத் தொடர்ந்து நார்வே மற்றும் ஐஸ்லாந்து ஆகிய நாடுகள் உள்ளன.

# இதரச் செய்திகள்

## தக்லா தொல்பொருள் கண்டுபிடிப்பு

- எகிப்தின் தக்லா சோலையில் (Dakhla Oasis) உள்ள பிர் அல்-ஷகாலாவில் கி.பி. 3 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி அல்லது 4 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியைச் சேர்ந்த 1,700 ஆண்டுகள் பழமையான பிரமிடு வடிவக் கல்லறையை தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.
- சேற்றுச் செங்கற்களால் ஆன இந்தக் கல்லறை ஒரு திருமணமான தம்பதியினருக்காகக் கட்டப்பட்டுள்ளதுடன் இது எகிப்திய, கிரேக்க மற்றும் ரோமானிய கலாச்சார மரபுகளை ஒருங்கிணைக்கிறது.
- எகிப்திய பாணியிலான இதன் நுழைவாயில் 14 படிகள், ஹைரோகிளிஃபிக் இறுதிச் சடங்கு மந்திரங்கள், இறக்கைகள் கொண்ட சூரிய வட்டு மற்றும் இரண்டு நாகங்களைக் கொண்டுள்ளது.
- கல்லறையின் உள்ளே ஒரு கல் தூணில் பண்டைய கிரேக்கத்தில் 19 வரிகள் கொண்ட இறுதிச்சடங்கு கவிதை கண்டுபிடிக்கப்பட்டது.
- மட்பாண்டங்கள், மணற்கல்லால் ஆன படையல் மேசை, ஒரு சுத்திகரிப்பு தொட்டி மற்றும் ரோமானியப் பேரரசர் கான்ஸ்டன்டைனைக் காட்டும் வெண்கல நாணயம் ஆகியவற்றையும் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்தனர்.
- தாலமிக் மற்றும் ரோமானிய காலங்களில் தக்லா சோலையின் பண்டைய தலைநகரான மோதிஸின் (Mothis) நெக்ரோபோலிஸின் ஒரு பகுதியாக பிர் அல்-ஷகாலா இருந்தது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★